**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திரு.பா.குணசேகரன் த/பெ காலஞ்சென்ற திரு.K.பாலுசாமி – கருணை அடிப்படையில் தட்டச்சராக பணிநியமனம் – பணியை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [பணி–9(3)] துறை**

**அரசாணை (3டி) எண்: 33**

**நாள்: 10.03.2017**

**படிக்கவும்:**

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் கடித எண்.அ3/75211/2004, நாள் 16.06.2011.
2. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆகு4/55811/2011, நாள் 11.10.2014.
3. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016.
4. அரசு கடித எண்.44902/பணி–9(3)/2014–6, வருவாய்த் துறை, நாள் 28.10.2016.
5. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடித எண். 7326/சிடி–A1/2016, நாள் 20.02.2017.

***********

**ஆணை:**

திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில், வருவாய் ஆய்வாளராகப் பணியாற்றியபோது 31.12.2002 அன்று காலமான திரு.K.பாலுசாமி என்பவரின் மகன் திரு.பா.குணசேகரன் என்பவர் கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால் திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டு, தனியர் 04.08.2009 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு.பா.குணசேகரன் என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 04.08.2009 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் முறையாக வரன்முறை செய்ய ஆணை வேண்டி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் முன்மொழிவு அனுப்பியிருந்தார்.